



Signature Not Verified
Signed by Assistant Director
Location:Karur
Date:2025.09.01 13:12:16

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கரூர் மாவட்டம்
## தேவர்மலை ஊராட்சி

கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியம், தேவர்மலை ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்:- 198/1A2B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(திட்டமில்லாப்பகுதி)

Online Ref.No : W53XBH79/2025/TCP

அளவு : 1 : 400

வ

### குறிப்புகள்:

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | = | 0.21 ஏக்கர் (850.00ச.மீ) |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | = | |
| நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை | = | |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | = | 1 எண்ணம் |
| ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை | = | 1 எண்ணம் |

(அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019-பிஏ2, நாள்:05.02.2020-ன்படி 86.00ச.மீ ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான வழிக்காட்டி மதிப்பீடு தொகையினை மனுதாரர் செலுத்தியுள்ளார்.)

### மூலை முடக்கு:

7.20மீ முதல் 12.0மீ அகலச்சாலைகளுக்கு 1.50மீ X 1.50மீ விடப்பட வேண்டும்.
12.0மீ முதல் 30.5மீ அகலச்சாலைகளுக்கு 3.00மீ X 3.00மீ விடப்பட வேண்டும்.

### கட்டட வரம்பு :

30.50மீ அகல சாலைகளுக்கு மேல் 6.0மீ விடப்பட வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ அகல சாலைகளுக்கு மேல் 3.0மீ விடப்பட வேண்டும்.

### நிபந்தனைகள்:

1. இம்மனை உட்பிரிவு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன், இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. இம்மனை உட்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனை உட்பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனை உட்பிரிவு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை, அவர்களால் ரத்து செய்யப்படும்.

3. விற்பனைக்குண்டான மனை உட்பிரிவினை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

4. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை உட்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனை உட்பிரிவுயின் நுழைவாயிலில் 6'X4' -அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

5.இந்து சமய அறநிலையத்துறை(HR&CE) & வக்ஃப் வாரியம் கட்டுபாட்டில் அமையவில்லை என்பதை சம்மந்தபட்ட உள்ளாட்சி உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

### சிறப்பு நிபந்தனைகள்:

உத்தேச மனையிடத்தில் கட்டடம் கட்ட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் போது TNCD & BR-2019-ன்படி அணுகுசாலையின் அகலதிற்கு ஏற்ப முன்பக்க திறவிடம் விடப்பட வேண்டும்.

### குறிப்பு:

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ/மா.ந.ஊ.அ.(க.மா) எண்: 136/2025

(இணையதள ஒப்புதல் இ-சைன் செய்யப்பட்டது)

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கரூர் மாவட்டம்